Hindu Tamil 06/05/2025

# பெண் கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் சாரதாலயத்தை நிறுவியவர் அவினாசிலிங்கம்

## மகாராஷ்டிரா மாநில ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் புகழாரம்

**கோவை**

பெண் கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் பெண் கல்விக்காக சாரதாலயத்தை நிறுவி கல்வி வழங்கிய மாமனிதர் டி.எஸ்.அவினாசிலிங்கம் என்று மகாராஷ்டிரா மாநில ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் புகழாரம் சூட்டினார்.

அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை சார்பாக, கோவையில் உள்ள அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தில் டி.எஸ்.அவினாசிலிங்கத்தின் 122-வது பிறந்த நாள் விழா நேற்று நடைபெற்றது. துணைவேந்தர் பாரதி ஹரிசங்கர் வரவேற்றார். விழாவில் மகாராஷ்டிரா மாநில ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன் பேசியதாவது:

அவினாசிலிங்கம் ஐயாவின் பள்ளியில் படித்த முன்னாள் மாணவன் என்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்று பெண் கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் பெண் கல்விக்காக சாரதாலயத்தை நிறுவி கல்வி வழங்கிய மாமனிதர். மகளிர் கல்விக்காகப் பாடுபட்ட மாமனிதர் டி.எஸ்.அவினாசிலிங்கம். அரசியலை அறமாகப் பார்த்தவர். ஆன்மிகத்தோடு கூடிய கல்வியை வழங்குவதில் தலைசிறந்தவராகத் திகழ்ந்தார்.

கல்வியானது நன்னெறிக் கல்வியாகவும், பண்பாட்டுக் கல்வியாகவும் அமைய வேண்டும். தனி மனித ஒழுக்கத்தை கடைபிடித்தால் வாழ்வின் பல துன்பங்களை எதிர்கொள்ளும் தன்னம்பிக்கை பிறக்கும். இளைய தலைமுறையினர் சத்தியத்தையும், தியாகத்தையும் உணர்ந்து நன்னெறிகளை உருவாக்கி வாழ வேண்டும்.மனதைக் கட்டுப்படுத்தாமல் மகத்தான மனிதர்கள் ஆக முடியாது.

அதேபோல எடுத்துக்கொண்ட செயலை முழுமையாக முடிப்பவர்கள் மட்டுமே வெற்றியை அடைவார்கள். தான் செய்யும் வேலையில் திருப்தியடைய வேண்டும்.முன்னேறியவர்களைகண்டுவியக்காமல்கடினஉழைப்பின் வழி, மகத்தான சிந்தனையின் வழியில் வெற்றியடைய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

ஸ்ரீ அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலரும், வேந்தருமான மீனாட்சிசுந்தரம் பேசினார்.

ஸ்ரீ அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளையின் வாழ்நாள் அறங்காவலர் குழந்தைவேல் வாழ்த்தி பேசினார்.

முன்னதாக, நினைவு மண்டபத்திலுள்ள அவினாசிலிங்கத்தின் சிலை புதுப்பிக்கப்பட்டு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. பல்கலைக்கழக பதிவாளர் இந்து நன்றி கூறினார்.



கோவை அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற டி.எஸ்.அவினாசிலிங்கத்தின் 122-வது பிறந்த நாள் விழாவில் பேசிய மகாராஷ்டிரா மாநில ஆளுநர் சி.பி.ராதா கிருஷ்ணன்.